O.S.No.167/2019
PW1 – முகமது மீரான்
நாள் 24.10.2025

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்தின் சர்வே எண். 1044/20 என்றால் சரிதான். தாவா சொத்தின் கிழக்கே எனக்கு சொந்தமான சர்வே எண்.1044/25 என்ற சொத்து உள்ளது என்றால் சரிதான். அதற்கும் கிழக்கில் உள்ள சொத்து எங்கள் சொத்து தான் அந்த சொத்தை எனது தகப்பனார் இப்ராகிம் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார். மேற்படி இப்ராகிம் எனது சகோதரியின் கணவர். தாவா சொத்தும் அதற்கு கிழக்கில் உள்ள சொத்தும் முன்பு சின்ன மீரான் ராவுத்தர் என்பவருக்கு பாத்தியமான சொத்து என்றால் சரியல்ல.

2. தாவா சொத்து சின்ன மீரான் ராவுத்தரிடம் எனது தாத்தா சக்கரை ராவுத்தர் கிரையம் வாங்கிய சொத்தாகும், எனது தாத்தா சின்ன மீரான் ராவுத்தரிடம் கிழமேல் 5 1/2 கஜமும், தென்வடல் 17 கஜமும் குறிப்பிட்டு அந்த கிரையப்பத்திரம் எழுதப்பட்டுள்ளது. 30.09.1936 ல் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தில் சொத்து விவரத்தில் இதில் கிழமேல் கெஜம் 5 1/2 ல் என்னுடைய வீட்டிற்கும் கிழக்கே இட சந்துக்கு 1 கெஜம் நீக்கி வீடு கட்டிக்கொள்ளவும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 கெஜம் என்பது 3 அடி என்பதும், 5 1/2 கெஜம் என்பது 16 1/2 அடி என்பதும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3. நாங்கள் வீடு கட்டுவதற்கு 4 கெஜம் அதாவது 12 அடி மட்டுமே வீடு உள்ளது என்றால் சரியல்ல. எனது தாத்தா கிரையம் வாங்கிய வீடு யாருடைய வீடு என்றால் சின்ன மீரான் ராவுத்தர் வீடு ஆகும். எங்களின் 30.09.1936 கிரையப்பத்திரத்தில் மேற்கு மாலாக என் வீடு என்று சின்ன மீரான் ராவுத்தர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எங்கள் பத்திரத்தில் மேற்கு மாலாக குறிப்பிடப்பட்டுள்ள சின்ன மீரான் ராவுதர் வீடு இருந்த இடம் பிரதிவாதி வசம் உள்ளது. 1936 பத்திரத்திற்கும் மேற்கில் உள்ள சின்ன ராவுத்தர் வீட்டின் பகுதியை 1944 ல் பிரதிவாதியின் தாத்தா கிரையம் வாங்கினார் என்றால் தவறு, பிரதிவாதியின் அப்பா தான் கிரையம் வாங்கினார்.

4. அவ்வாறு 1944 ல் கிரையம் வாங்கும் போது கிழமேல் 5 1/2 கெஜம் அளவு குறிப்பிட்டு கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். 1944 ல் மேற்கண்டவாறு கிரையம்

கொடுக்கும் போது சின்ன மீரான் ராவுத்தர் கீழ்புறம் பாதி நீக்கி மேல்புறம் 5 1/2 கெஜத்தை கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தில் கீழ்புறம் 5 1/2 கெஜம் தன் கைவசம் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. அதே சின்ன மீரான் ராவுத்தர் 06.07.1946 ல் ஏற்கனவே கிரையம் கொடுத்த இடத்திற்கும் கீழ்புறம் தன் கைவசம் வைத்திருந்த கிழமேல் 5 1/2 கெஜம், தென்வடல் 8 கெஜம் இடத்தை சின்ன மீரான் ராவுத்தர் பிரதிவாதியின் தாத்தா செய்யது இப்ராகிம்க்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

5. 06.07.1946 ல் கிரையப்பத்திரத்தில் கண்ட சொத்திற்கும் வடபுறம் தன் கைவசம் வைத்திருந்த சொத்தை சின்ன மீரான் ராவுத்தர் பிரதிவாதியின் தகப்பனார் செய்யது முகமது ராவுத்தருக்கு 03.07.1962 ல் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தாத்தா 1944 ல் கிரையம் பெற்ற சொத்தை 08.04.1949 ல் பிரதிவாதியின் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது தாத்தாவுக்கு கிரையம் கொடுத்த கிழமேல் 5 1/2 கெஜம் நிலம் நீக்கி மேல்புறம் இருந்த கிழமேல் 11 கெஜம் இடத்தையும் அதிலிருந்து வீட்டையும் பிரதிவாதியின் தகப்பனாரும், தாத்தாவும் 3 கிரையப்பத்திரங்கள் மூலம் கிரையம் பெற்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல.

6. 11 கெஜம் என்பது 33 அடி என்பது எனக்கு தெரியும். தாவா சொத்தான சர்வே எண்.1044/20 சொத்தின் வடபுறம் மற்றும் தென்புறத்தில் கிழமேல் அளவு 10 மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 10 மீட்டர் என்றால் 32.8 அட என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். பிரதிவாதி தாங்கள் கிரையம் பெற்ற 33 அடிக்கு பதிலாக 32.8 அடியில் தான் பட்டா பெற்றுள்ளார் என்றாலும், எங்களுக்கு பாத்தியமான சொத்து 1 அடி கூட பிரதிவாதியின் பட்டாவில் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கும் கீழ்புறம் உள்ள சர்வே எண்.1044/25 மற்றும் அதற்கும் கீழ்புறம் உள்ள 1044/27 ஆகியவற்றின் ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. எங்களுக்கு பாத்தியமான சொத்து சர்வே எண்.1044/25, 1044/27 ஆகியவற்றில் இருக்கிறது என்றாலும், மேற்படி விவரங்களை மறைத்து பிரதிவாதிக்கு பாத்தியமான சொத்தில் என் சொத்து இருப்பதாக நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாசொத்தில் பிரதவாதி தற்போது கட்டியுள்ள

வீட்டிற்கும் முன்னதாக ஒரு பழைய கல்லு வீடு இருந்தது என்றால் சரிதான். மேற்படி பழைய கல்லுவீடு தான் பிரதிவாதியின் தகப்பனார் கட்டிய வீடு என்றால் சரிதான். மேற்படி பழைய கல்லுவீட்டில் தான் பாரத ஸ்டேப் வங்கி 10 வருடங்களாக இயங்கி வருகிறது என்றால் சரிதான். நான் ஏற்கனவே இருந்த கல்லு வீடு சம்மந்தமாக எந்த பிரச்சனையும் செய்யவில்லை. ஏற்கனவே இருந்த கல்லு வீடும் தற்போது பிரதிவாதி கட்டியுள்ள வீடும் தாவா சொத்தான சர்வே எண். 1044/20 ல் தான் இருந்தது என்றால் சரிதான்.

8. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளந்து பார்வையிடும் போது நானும் உடன் இருந்தேன். தாவா சொத்து 60, 70 வருடங்களாக பிரதிவாதி, மேற்படியாரின் முன்னோர்களால் பாத்திய அனுபவம் செய்யப்பட்டு வருகிறது என்றாலும், மேற்படி காலங்களில் நான் எந்த ஆட்சேபனையும் செய்யாமல் இருந்து விட்டு தற்போது வேண்டுமென்றே பிரதிவாதியின் சொத்தை அபகரிப்பதாக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாசொத்து முழுவதும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும், 04.12.1985 தேதியில் பிரதிவாதிக்கு பிரதிவாதியின் தகப்பனார் எழுதிக்கொடுத்த இனாம் ஆவணத்தில் அளவு குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளதை நான் தெரிந்து கொண்டு பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளளேன் என்றால் சரியல்ல.

9. மேற்படி அளவு குறைபாடு தவறுதலாக ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுயைட வழக்கின் பரிகாரங்கள் காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. தாவா சொத்தை நானோ, எனது முன்னோர்களோ எந்த காலத்திலும் பாதிய அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி